**புத்த சாசன நிதியம் - 2020**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்த சாசன நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதென நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை பொறுப்பினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்காத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பௌத்த தர்ம நூல்கள் | 6,578,146 | மெய்மையாய்வு அறிக்கை | 2022/12/31 இல் உள்ளவாறு தர்ம புத்தக இருப்பு புத்தகக் கணிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்கள் 2023 | கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டு அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (ஆ) | சுனாமி உதவி | 1,348,796 | விரிவான தகவல்கள் | சுனாமியால் பாதிப்புக்குட்பட்ட கடற்கரையை அண்மித்த விகாரைகளுக்கு உதவிகள் வழங்குவதற்காக கிடைத்த நன்கொடை தொகையாகும் இது தற்போது பேரேட்டுக் கணக்கில் முன் கொண்டு வரப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் நடத்தப்பட உள்ள 89 ஆவது நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைத்த பின்னர் புத்தசாசன நிதிய கணக்கில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. | விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | முற்பணங்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 13,031,828 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் காலப்பகுப்பாய்வு | குறித்த மீதிகளை 2023 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள், காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நடைமுறை சொத்துக்கள் | 1,712,435 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் காலப்பகுப்பாய்வு | குறித்த மீதிகளை 2023 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள், காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | கொடுப்பனவு உறுதிச்சீட்டு | 1,903,671 | பற்றுச்சீட்டுக்கள் | எதிர்காலத்தில் செய்யப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கு அத்தொகை கிடைத்ததாக பெறுவோரிடமிருந்து பற்றுசசீட்டு/ கையொப்பத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஆலோசணை உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டுள்ளன | நிதி பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டதாக உறுதிப்படுத்தக் கூடிய வகையில் பெறுவோரிடமிருந்து பட்டியல்/ பற்றுச்சீட்டு உரிய உறுதிச்சீட்டில் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 1.6 பெறவேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத இருந்த ரூபா 13,031,828 தொகையான பெறவேண்டிய முற்பணங்கள் மற்றும் ஏனைய பெறவேண்டிய காசு மீதியில் ரூபா 1,087,447 தொகை 08 ஆண்டுகளுக்கும் ரூபா 11,944,381 தொகை 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைய மீதிகளாக (கடந்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம்) இருந்ததுடன் இந்த அறிக்கை திகதி வரையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த மீதிகளை 2023 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படஉள்ளது | குறித்த மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத இருந்த ரூபா 1,712,435 ஆன நடைமுறை பொறுப்பு மீதிகளில் ரூபா 544,409 தொகை 06 ஆண்டுகளுக்கும் 1,168,025 தொகை 05 ஆண்டுகளை விட பழைய மீதிகளாக இருந்ததுடன் அம்மீதிகளை தீர்வு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | குறித்த மீதிகளை 2023 ஆம் ஆண்டில் தீர்வு செய்வதற்கு அல்லது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் | நீண்ட காலமாக இருந்து வரும் உரிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றம் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 396 | 2013 முதல் 2020 டிசம்பர் வரை 31 வரையான காலப்பகுதியில் நிதியத்தால் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 154,363 ஆன 09 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காசோலையை 2023 மே மாதம் புத்தசாசன நிதியத்தின் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | காசோலை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (ii) | நிதி பிரமாணம் 757 | கணக்காண்டின் இறுதியில் பொருள் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | விரைவில் பொருட் கணிப்பீட்டினை மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை அனுப்புவதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | பொருட் கணிப்பீடு தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 48,920,642 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 47,513,190 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,407,452 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு முதலீட்டு வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 264 இன் பிரகாரம் ஒவ்வொரு கொடுப்பனவும் உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட மொத்த தொகை கிடைத்ததாக பெறுவோனிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாக, (தேவையான போது உரிய முறையில் முத்திரை ஒட்டப்பட்ட) பற்றுச்சீட்டில் சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும், மேலும், சில கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளுடன் ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிய பற்றுச் சீட்டுகள்/ உறுதிச் சீட்டுகள் பரிசோதிக்கப்படாமல் இணைக்கப்பட்டு இருந்ததை அவதானிக்க முடிந்தது. | எதிர்காலத்தில் செய்யப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்காக அத்தொகையை பெற்றுக் கொண்டதாக பெறுவோனிடமிருந்து பற்றுச்சீட்டு/ / கையொப்பத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஆலோசனைகளை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட தொகை கிடைத்ததாக பெறுவோனிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு / பொறுப்பேற்றல் குறித்த உறுதிச்சீட்டில் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதியத்தில் இருந்து படிகள் மானியங்கள் போன்ற கொடுப்பனவின் போது அநேகமான சந்தர்ப்பங்களில் குறித்த காலம் கடந்து சில மாதங்களின் பின்னர் கொடுப்பனவு செய்யப்படுவதாக அவதானிக்கப்பட்டது அதன் பிரகாரம் ரூபா 4,160,656 கூட்டுத்தொகையான 04 மாதங்கள் முதல் 24 மாதங்கள் தாமதம் இடம்பெற்று இருந்த 18 சந்தர்ப்பங்கள் இருந்தன. | செயற்திட்டங்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது முன்னைய மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உரிய பற்றுச்சீட்டுகள் கிடைத்த பின்னர் அடுத்த மாதத்தின் போது கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதால் பற்றுச்சீட்டு கிடைப்பதிலான தாமதங்கள் இடம் பெற்றமையின் அடிப்படையில் கொடுப்பனவுகளை செய்வதிலும் தாமதம் ஏற்பட்டது. தற்போது பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை தொடர்புகொண்டு துரிதமாக | தாமதமின்றி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பற்றுச்சீட்டுக்களை வரவழைப்பதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உரிய செயன் முன்னேற்ற அறிக்கை ஒன்று தயாரிக்கப்படாதிருந்ததால் நிதியத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளதா என்பதை கணக்காய்வின் போது பரீட்சிக்க முடியவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்குரிய செயன்முன்னேற்ற அறிக்கை 2021.02.25 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயன் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதியம் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுகள் உள்ளடக்கப்படா திருந்ததுடன் ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல், நன்கொடைகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடல் தொடர்பாக செயலாற்றல் மற்றும் செயலாற்றல் குறிகாட்டிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த விடயங்களை வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக் குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | குறித்த விடயங்களை பூர்த்தி செய்து வருடாந்த செயலாற்று அறிக்கை முழுமையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவையின் நிதிப்பிரமாணம் 877 (2) (ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதியம் தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக் களுடன் செயலாற்றல் அறிக்கை அரச நிதி திணைக்களத்திற்கு பிரதி ஒன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்குரிய நிதி | 2019 இன் நிதிக் கூற்றுகள் மற்றும் செயலாற்றல் அறிக்கை 2022.11.30 ஆம் திகதி கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டதுடன் அதற்குரிய கணக்காய்வு அறிக்கை 2023.01.31 ஆம் திகதி வழங்கப்பட்டது. 2022.12.31 வரை இறுதிக் கணக்கு தற்போது தயாரிக்கப்பட்டு நிர்வாக சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் குறித்த கால எல்லைக்குள் நிதிக்கூற்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | |
|---|---|
| கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கை இரண்டு வருடங்கள் தாமதத்தின் பின்னர் 2023 ஜுன் 20 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | துடன் அந்த அறிக்கையை 2023.06.02 ஆந் தேதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. |

4.2 **வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்துக்கு முன் வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் நிதிப் பிரமாணம் 877(2) (உ) பிரகாரம் நிதியத்தின் நிதி அறிக்கை செயலாற்றல் அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்காய்வு அறிக்கை உள்ளடக்கப்பட்டு வருடாத செயலாற்றல் அறிக்கை உரிய ஏற்பாடுகளின் கீழ் மும்மொழிகளும் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்காக நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை இவ்வறிக்கை திகதி வரை பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கைக்காக நிர்வாக சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டும் |

**4.3 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவு இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் நிதி பிரமாணம் 133(ஆ) மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் கிடைக்கவில்லை. | நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் நிதிப் பிரமாணம் 877(1) (இ) பிரகாரம் அடுத்த ஆண்டின் பாதீட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நடப்பாண்டு செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 நிதியாண்டுக்குரிய பாதீடு நிர்வாக சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் 2020 செப்டம்பர் 07 ஆம் திகதி மேற் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2020 நிதியாண்டிற்குரிய பாதீட்டுக்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்வது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கொரோனா தொற்று நிலைமை அடிப்படையில் 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதியின் பின்னர் நிர்வாக சபை கூடுவதற்கு தவறி இருந்ததால் அதன் பின்னர் 2020 செப்தம்பர் 07 ஆம் தேதி நடைபெற்ற முதலாவது நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் பொதுத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகிறேன். | செலவினங்களை மேற்கொள்வதற்காக பாதீட்டின் மூலம் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |